# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**STC 468/2023**

**Deposition of Wit/ness for PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | புஷ்பவள்ளி | Caste | : | |
| Father/Husband Name | : | ஆண்டி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 09.03.2026**

**முதல் விசாரணை** :

நான் கருகப்பிள்ளை ஊரில் வசித்து வருகிறேன். சுமார் ஒன்றரை வருடம் காலை 10.00 மணியளவில் எனது வீட்டின் முன்பு வைத்து கௌசல்யா, பிரகாஷ் ஆகியோர்என்னை அடித்தார்கள். எதிரிகள் கையாலும் கம்பாலும் கல்லாலும் என்னை அடித்தார்கள். அதனால் எனக்கு உதடின் மேல்பகுதி, இடது கண்ணிலும், இடுப்பிலும், இடது கையிலும் எனக்கு காயம் ஏற்பட்டது. எனது இடது கையை தற்போது தூாக்கமுடியவில்லை . இடது கண்ணில் தற்போது கால் வாசி பார்வை தான் எனக்கு தெரிகிறது. நாங்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியவில்லை. வெளியே வந்தால் எதிரிகள் எங்களை சத்தம் போட்டு சண்டை செய்கிறார்கள். இதுசம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

எதிரிகள் எனது பக்கத்து வீட்டுகாரர்கள் ஆவார். எங்கள்வீடு சற்று உயரமாக உள்ளது என்றாலும் எங்கள் வீட்டில் கல் ஊன்டி உள்ளோம் என்றாலும் சரிதான். நான் புகார் கொடுக்க இரவு 9.00 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். புகாரை எனது கணவர் எழுதி கொடுத்தார் நான் அதில் கையெழுத்து செய்தேன். நான் முதல்விசாரணையில் எனக்கு ஏற்பட்ட காயங்களை சொல்லியுள்ளது போல் எனது புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பு 2 , 3 தடவை புகார் கொடுத்துள்ளேன். எனது மகன் இந்திய ராணுவத்தில் வேலை செய்து வருகிறார். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் எனது புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இரண்டு குடும்பமும் பேசி கொள்ளமாட்டோம் என்றால் சரிதான். எதிரி எங்களோடு எப்போதும் வம்பு இழுத்துக்கொண்டே இருப்பார். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் புகார் கொடுக்கவில்லை என்றாலும் காலை 10.00 மணியளவில் எதிரிகள் யாரும் கம்பாலும் கையாலும் என்னை தாக்கி காயப்படுத்தவில்லை என்றாலும் அன்றைய தினமே இரவு 9.00 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பாதையில் நாங்கள் கல்ஊன்றியதை எதிரிகள் தட்டி கேட்டார்கள் என்றும் நான் இராணுவத்தில் பணிபுரியும் எனது மகனை வைத்து காவல் நிலையத்தில் தொலைபேசியில் பேசி பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.